0736

உ
சிவமயம்

பருத்தி சிவசுப்பிரமணிய சுவாமி பேரில்
பாடப்பெற்ற

# கந்தரணி மாலை



மூலஸ்தான மூர்த்தி
பருத்தி, சுழிபுரம்.

**தா. வயித்தியலிங்கம்**
ஆக்கியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

இஃது

இரண்டாம் பதிப்பு

1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/0736

உ
குகமயம்

# கந்தரணி மாலை



இஃது

**சுழிபுரத்துப் பறுளைக் கந்தஸ்வாமி பேரில்**

யாழ்ப்பாணம் விக்ரோறியாக் கல்லூரி
ஆசிரியராயிருந்து தற்பொழுது
கொழும்பு மாநகரின் சாசனக் கல்லூரியில்
ராஜநீதி சாஸ்திரம் பயிலும்
திரு. நாமோதரம்பிள்ளை வயித்தியலிங்கம்
அவர்களால் இயற்றப்பெற்றது.

BY

**T. VAITIALINGAM**

Student-at-Law.

*Formerly Assistant Master*
(VICTORIA COLLEGE, CHULIPURAM JAFFNA.

*(All Rights Reserved.)*

முதற்பதிப்பு : **MAY, 1930**
2-ம் பதிப்பு: 1980

கலைவாணி அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பதிப்பு — 1980.

## முகவுரை

1930-ம் ஆண்டு வைகாசி மாதத்தில் வெளிவந்த இப்பாடல் பல வருடங்களாக மறைந்து போய்விட்டதாகக் கருதப்பட்டிருந்தது. இதனை எங்கு பெறலாமெனப் பலர் ஏங்கும் நிலையில் இருப்ப, ஒரேஒரு பிரதி மலாயாத் தேசத்தில் உத்தியோகம் வகித்து அங்கிருந்து காலமான எமது சகோதரர் சுப்பையா அவர்களின் குடும்பத்தினர் பாதுகாப்பிலிருந்து பெறப்பட்டது. இப்பிரதியை சேமித்துப் போற்றிப் பாதுகாத்து வைத்திருந்தவர்களுக்கு ஆக்கியோன் மகன் தாமோதரலிங்கமும் நாமும் மிக்க நன்றியுடையேம்.

இவ்வரிய பிரதியை இவ்வருடம் மலாயா சென்று திரும்பிய இதனை இயற்றியவரின் பத்தினியே இங்கு கொண்டு வந்தனர் என்பது மிகவும் மெச்சத்தகுந்தது

இப்பாடல்களின் பழமையினையும் சுவையினையும் மற்றவர்களும் இரசிக்கும் நோக்கமாகவும் இவ்வழிபாட்டுக்குரிய கந்தக் கடவுளின் புகழ்மாலையை எம்மிடத்தில் நிலைபெறச் செய்யவும் இதனை மீண்டும் பதிப்பிக்க முற்பட்டுள்ளேம். இப்பதிப்பில் முன்னிருந்த முகப்பு அட்டையினையே பிரதியாக்கஞ் செய்துள்ளோம்.

சில இடங்களில் எழுத்துப்பிழைகள் மாத்திரம் திருத்தப்பட்டதேயன்றி இப்பாடலில் இடம்பெற்ற எந்தவொரு வாக்கியமோ பதமோ மாற்றப்படவில்லை.

இப்பதிப்புக்கு உதவி செய்வதனை அடிப்படையாக வைத்து அன்புடன் வரவேற்று இதனை வாங்கிப் பாடிப் பயனடைவீர்களெனப் பிரார்த்திக்கின்றேம்.

தேவதோட்டம்,
சுழிபுரம்
1980 - வைகாசி.

தா. சங்கரப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்.

# பருளையெனும் ஸ்தல வரலாறு

பருளம் என்னும் சமஸ்கிருதபதத்தின் பொருள் களைப்பாறு மிடமாகும். பருளை என்பது கந்தஸ்வாமியார் முன்னொரு காலத்திலே தற்கால இலங்கையின் தென்பாகமாக அமைந்திருக்கப்பெற்றதாகிய மகேந்திராபுரியை அரசாண்டுவந்த சூரபதுமனையும் அவனது சுற்றமித்திரர்களையும், பரிவாரங்களையும் அமர்புரிந்தடக்கிய பின் இந்தியாவை நோக்கிச்செல்லும்வழியில் களையாறும்பொருட்டு எழுந்தருளியிருந்த விடமாகும். இத்தொடர்புபற்றியே இராமபிரானும் தமது மனைவியாகிய சீதாபிராட்டியைக்கொண்டுசென்ற இராவணனைச் செயிக்கும்பொருட்டு இலங்கையில் முதன்முதலாக இவ்விடத்திலேயே தமது திருப்பாதாரவிந்தங்களைப் பதித்தனர். அவ்விராமபிரானின் பாதம்படிந்தமையினாலே இத்தலத்துக்கணித்தாயுள்ளதும் ஒவ்வொரு உற்சவகால இறுதிதோறும் அடியார்கள் சுவாமியைக் கொண்டுசென்று விசேஷ தீர்த்தமெனக்கருதித் திருவிழாக் கொண்டாடும் கடற்கரை திருவடிநிலை யென்றழைக்கப்படுகின்றது. இங்கு நன்னீர் பாய்வதாகும். இக்கரையில் அவ்விராமபிரான் வந்திறங்கிய காரணம் பற்றியே யாழ்ப்பாணத்தின் வலிகாமம் மேற்கில் இத்திருவடி நிலைக்கணித்தாயுள்ளதாகிய பொன்னாலையம்பதியில் அப்பெருமாள் கோவிலமைக்கப்பெற்றது.

இப்பருளையென்னுந்தலம் துவாரகாயுகத்திலும் மகிமைபெற்றிருந்ததென்பதை பாரதத்திலே தீர்த்தயாத்திரைச் சருக்கத்திலே வாசித்தறிக. தனஞ்சயனானவன் தென்னிந்தியாவிற் பலஸ்தலங்களையுந் தரிசித்த பிற்பாடு ஈழமண்டலத்தேயுள்ள பலஸ்தலங்களையுந் தரிசிக்க விரும்பித் திருவடிநிலை, கீரிமலை, திரிகோணமலை* என்னும் மூன்று விசேஷ ஸ்தலங்களையுந் தரிசித்ததாக "நாகர் பதியுங்கண்டான்"* என்னும் பாட்டிலே காண்க. இது இலங்கைச் சரித்திரத்திலே நாகர்கள் இலங்கையின் வட பாகத்திலேயிருந்தார்களென்பதையும் வற்புறுத்துகின்றது. நாகர்க்கரசனுடைய புதல்வியாகிய நாககன்னிகையை தனஞ்சயன் விவாகஞ்செய்தான் என்பதுமறியக்கிடக்கின்றது.

இக்கலியுகத்திலுமித்தலமானது சரித்திரத் தொடர்புள்ளதாயிருக்கின்றது. எவ்விதமெனின் இவ்விடத்திலே ஓங்கிவளர்ந்திருக்கின்ற பெரியவரசினுடையவயது முதிர்ச்சியைக்கொண்டே

* இதனைப் பற்றிய குறிப்பை அடியிற் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்புறுத்தக் கூடியதாயிருக்கின்றது. தற்காலத்துப் பெரிய மனுஷரின் ஆராய்ச்சியின் படிக்கு இம்மரமானது இலங்கையிலே புத்த சமயமானதுண்டான காலத்திலேயே யுண்டாக்கப்பட்டதென்று சொல்லக்கூடியதாக விருக்கின்றது. இக்கதை சரித்திரத்தோடு பொருந்தக்கிடக்கின்றது. எவ்விதமெனின் அசோகவரசனின் புதல்வியாகிய சங்கமித்தா வென்பவள் இலங்கையின் கண்ணே புத்த சமயத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு வரும்பொழுது இந்த ஸ்தலத்துக்குச் சமீபமாயுள்ள திவ்விய தீர்த்தக்கரையிலேயே வந்திறங்க வேண்டியதாயிருந்தது. இக்கடற்கரையோரமாக ஓர் புத்தகோயிலுஞ் சமர்ப்பித்தாள்போலும் அவள் இங்கேயே ஓர் கொஞ்சக் காலமாகவிருந்துகொண்டு தான் கொண்டுவந்த அரசமாக்கொப்புகளிலொன்றை இத்தலத்துக்குச் சமீபத்திலுள்ள தடாகத்துக்கருகாமையிலும் பிறிதொன்றை அனுராதபுரத்திலும் நாட்டினளென்றுமறியக்கிடக்கின்றது.

இன்றைக்குமெம் முதியோர்கள் இக்கடற்கரையோரத்தில் மளுவையென்னும் ஓரிடம் இருப்பதாகச் சொல்லுவார்கள். அம் மளுவையென்னுமிடம் சங்கமித்தாவினுற் கட்டப்பட்ட கோவிலிருந்தவிடமாகும், மளுவை என்னும் பதம் மாளிகவா (Maligawa) என்னும் சிங்களப்பதத்தின் சிதைவாகவேண்டும். மாளிகவாவென்பது புத்தர்களின் கோயில் (Dalada Maligawa). மளுவையென்னுமிடப்பெயரும், அவ்விடத்தின் கண்ணே காணப்படுகின்ற இடிந்த கட்டிடங்களும் அவ்வரசமரத்தின் முதிர்ச்சியும் சங்கமித்தாவானவளித்தரையில் வந்திறங்கினளென்பதையும் புத்தகோயிலிங்கிருந்த தென்பதையுமுண்மைப்படுத்துகின்றன.

இவையெல்லாமிற்றைக்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே நடக்கப்பெற்றவைகளென்பதை சரித்திரங்கூறும். பெரியர் பின் பெரியர் என்ற பிரகாரம் இவ்விடத்திற்கு அக்கந்த ஸ்வாமியானவர் எழுந்தருளிய தன்மைபோலவே இராமபிரானும் அவர் பின் சங்கமித்தாவும் அவர் காட்டிய வழியே வந்திறங்குபவராயினர்கள். அவ்விராமபிரானுடைய திருவடியானது இத் திருவடிநிலையென்னுந் திவ்விய சமுத்திரக்கரையின் கண்ணே என்றுமழியாததாக விருந்ததாகவும் அதைத்தரிசிக்கும்பொருட்டு இந்தியாவிலிருந்து பெரியமகான்கள் வந்து தரிசித்துக்கொண்டு சென்றதாகவுஞ் சரித்திரங்களும் முதியோருங்கூறுவர்.

ஆனதுபற்றியே இற்றைக்கு ஆயிரவருஷங்களுக்கு முன்னர் சோழதேசவரசனின் புதல்விகள் எழுவர் தங்கள் பரிவாரங்களினுடன் இத்திருவடி நிலைக்கு வடபுறமாகவுள்ள சம்பிலென்னுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகத்தில் வந்திறங்கினதாகவும்பழையோர் வாய்க்கேட்டறியலாம். அவர்கள் அத்திருவடி நிலையிற்சென்று அவ்விராமபிரானுடைய திருவடிகளைத் தரிசித்தபின் தாங்கள் வாசஞ் செய்யும் பொருட்டு ஒருபெரிய மாளிகையை மளுவையென்னுமிடத்திலும், வந்திறங்கிய துறைமுகத்துக்குச் சமீபமாக தாங்கள் வணங்கும் பொருட்டுசம்பீசுரன் கோவில் அல்லது சம்பில் என்னும் ஓர் சிவஸ்தலத்தையும், இப்பருளையெனுமிடத்திலிருக்கப் பெற்றதாகிய குளத்தில் தாங்களனைவரும் ஸ்நானஞ்செய்யும் பொருட்டு ஏழு தடாகங்களையும், அமைத்து அங்கே யெழுந்தருளியிருந்த விக்னேஸ்வரப்பெருமானுக்கும் இளையபெருமானுக்கும் பூசைக்கு நிபந்தனையுஞ் சமர்ப்பித்து வந்ததாகச் சொல்லுவர்.

சம்பீசுரன் கோவிலமைக்கப் பெற்றமையின் அவ்விடமிப்பொழுதும் சம்பிற்றுறையென்றழைக்கப்படுகின்றது. இன்றைக்கு மொருபெரிய இயற்கைத்துறைமுகமாக விளங்குகின்றது. அக்காலத்திலே இந்தியாவிலிருந்து இலங்கையின் வடபாகத்தில் வந்து குடியேறிய தமிழர்களெல்லாம் இத்துறைவழியாகவே வந்திருக்க வேண்டும். அதற்குச்சாட்சியாகக் கடுங்காற்றடிக்கும் பொழுது எறியப்பட்ட சாமான்களும் அக்காற்றிலகப்பட்ட கப்பல்களுமித் துறையில் வந்தடைவதினாலுமறிக. அதுவுமல்லாமல் கஞ்சா, அபின் முதலியவற்றை இந்தியாவிலிருந்து கொண்டுவருபவர்களித்துறையிலேயே வந்திறங்குகிறார்களென்றதற்குச் சென்ற வருஷங்களிலிங்கே கண்டெடுக்கப்பட்ட கஞ்சாவபின் புதையல்களும், வந்து கரையிலடைந்த படகுகளும் சாட்சியாகும்.

இவ்விடத்திலமைக்கப் பெற்ற சம்பீசுரன் கோவிலானது காலஞ்செல்லச் செல்லக்கடல்வாய்ப்பட்டது. பிற்காலத்திலே காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து சுழிபுரத்துக்கு வந்துகுடியேறிய வைசியகுலத்திலகரொருவரால் அந்தச் சம்பீசுரன் கோவிற் சிலையானது கண்டெடுக்கப்பட்டு அவர் தமதிருப்பிடத்துக்கருகாமையானவோரிடத்திலொருசிவாலயங்கட்டி அங்கு அச்சிலையை ஸ்தாபித்தனர். அந்த ஸ்தலமின்றைக்குமவரின் சந்ததியார்களாற் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இது நிற்க, பருளையின் பிற்கால சம்பவமானதென்னவென்றால் சோழகுமாரிகளின் காலமும் போக இவ்வூரார் விநாயகர் சந்நிதானத்திலே விநாயக புராணமும் சுப்பிரமண்ய சந்நிதானத்திலே கந்தபுராணமும் இரண்டு ஸ்தலத்துக்கும் பொதுவானவிடத்திலேயோர் மடமுமமைப்பித்துபுராணபடனமும் நடத்திவந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். ஏறக்குறைய இற்றைக்கு இருநூறுவருஷங்களுக்குமுன்னே சோழமண்டலத்திலிருந்து இந்நகரத்தின் கண்ணே எம்மூதாதையாகிய சேதுகாவலனெனும்மகிபன்வந்து இவ்விடத்திலும் யாழ்ப்பாணத்திலுள்ள பலவிடங்களிலும் இந்தியாவிலும் பலதிருத்தங்கள் செய்துளார். அவரும் அவருடைய சந்ததியாருமே இந்த ஸ்தலத்தைக் கட்டுவித்து உற்சவம் நடாத்துவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துவைத்தனர். தற்கால நிலை அர்ச்சகர்களின் விடா முயற்சியாலும் ஊரவர்களின் பொருளுதவியாலும் அப்பெருமானுடைய திருவருளினுலும் ஏற்பட்டதேயாம். இப்பொழுதுமிக்கோயிலானது எம்முன்னோனுகிய சேதுகாவல முதலியாரின் சந்ததியாரின் கவனத்திலும் அர்ச்சகரின் ஒழுக்கத்தாலும் ஊக்கத்தாலும் ஊரவர்களின் சிறப்பாலுமேம்பட்டு வருகின்றது.

பருளை என்னும் ஸ்தலம் சுழிபுரத்தேயுள்ளதாகும். இந்நகரமானது, சோழதேசத்திலிருந்துவந்தவர்களாற் குடியேறப்பெற்றபடியால் சோழியபுரமென்றழைக்கப் பெற்றிப்போ சுழிபுரமென்று வழங்கப்படுவதாயிற்று. இச்சுழிபுரத்தில் சதுர்யுககாலங்களிலு முன்னதமுற்று விளங்கியதாகிய பருளையின்கண்ணே யெழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானையும், சுப்பிரமணியப்பெருமானையுந் தரிசித்து நெஞ்சிலே இடையருதியானிப்பவர்களுக்கு குறையாத செல்வமும், கலங்காத நெஞ்சமும் நீங்காத சுகமும் எல்லையில்லாத கல்வியும். பிரியாவருளும் பெற்றுவாழ அனுக்கிரகம் செய்வாராக.

தாமோதர வாசம்
சுழிபுரம், 9-5-30

தா. வ.

---

குறிப்பு: "நாகர்பதியுங்கண்டான் என்று குறிப்பிட்டுள்ளது அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கத்திலே. 47-ம் செய்யுளில் வரும் "உரக தலங்கண்டு மீண்டான்" என்பதனை என்று கொள்ள வேண்டியிருக்கின்றது. மேலும் அருச்சுனன் யாத்திரை செய்த இடங்களுள் சேதுவும் அதன் கடல் கடந்த முக்கோணக் குன்றும் என்பதனுல் திரிகோணமலை என்று கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# கந்தரணி மாலை



## விநாயகர் துதி

பாரேத் திடுசுழிபு ரப்பருளாய்ப் பதிவாழும்
மாரேந் துகையுடைய மத்தகயப் — பேரோனே
சிந்தையிலுந் தன்னிளைய கந்தனையே போற்றுதற்குச்
செந்தமிழை நீயெனக்குச் செப்பு.

## சிவபெருமான் துதி

பொன்னம்ப லவாணனே பொதுவில் நடம்புரி
பொற்றுள மளித்திடு பொறையுடைக் கடவுனே
பற்றிநாளுந் தனிளைய பாலனைப் போற்றிடப்
பக்தியது வளரவே பரமனே யருள்வையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவகாமியம்மை பேரிற் கீர்த்தனம்

### பல்லவி

தாயேயிரக்கமில்லையோ எனைத்தாக்காது
நோயைத்தடுப்பதில்லையோ                                   தாயே

### அநுபல்லவி

தாயேயிரக்கமில்லை நீ நோயைத்தடுப்பதில்லை
இத்தனைகாலமாக இரங்காமலிருக்கலாமோ          தாயே

### சரணங்கள்

பக்தியுடனே நானே மெத்தப்பணிந்திட்டேனே
சித்தியுடனே மிக்க நித்த மருளளிக்க
இத்தருணம் நீ ஈஸ்வரருடன்வராதிருக்கலாமோ  தாயே

## சரஸ்வதி துதி

சரஸ்வதித்தாயே தந்திடுவாயித்
தரணியில் நீயே                                   சரஸ்

சகல பலகலை சாஸ்திரமுளபல
எலாமெனக்களித் திரட்சித்திடுவாய் நீயே
பதுமாசன வாசனி மதுரவாச கவ்ராணி
மகிழ்ந்துநான்பணிந்திட மங்களமருள்வாய் நீயே சரஸ்

ஈழவரசன்மகள் ரத்னமணிமண்டபத்தில்
எய்திய வாதவூரர் ஈந்திடுகேள்விகட்கு
அந்நாளிலவள்மூகை யழித்தவள் நாவிலெய்தி
அரியவிடைகளையே அளித்திட்டதேவி நீயே        சரஸ்

நல்லவர்தனின்நாவில் நான்மறையோதநிற்பாய்
கற்றவர்களுளநல்ல சபைதனையேநாடிநிற்பாய்
நித்தமுங்கடவுளரை நாடுபவரோடு நிற்பாய்
பத்தியுடனெந்தன்நாவில் பருனைவேலனையேபாட
                                          நிற்பாய் சரஸ்வதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவையடக்கம்

அடியனின் கொடியநோ யகற்றி யாளவே
படியினிற் பருளைவாழ் வேலனைப் பாடவே
துணிந்திடு மூடனின் சொற்குறை தீரவே
துணைபுரி வார்களே தூக்கறி வோர்களே

---

## பருளைக்கந்தஸ்வாமி பேரிற் கீர்த்தனம்.

மாருடவாறதேனோ (என்ற மெட்டு.) (கமாஸ்)

தீர்க்காதிருப்பதேனோ தேவாதிதேவே நீதீர்
தினமுந்தொழுமெந்தன் தீவினையேயோட நீதீர்
அன்றுசூரனைக்கொன்று அருள்புரிந்தாயே சீலா
இன்றுமிக்கொடுநோயை வென்றுடிவடிவேலா நீதீர்
பக்தியுடனேவந்து பரவசமாகிநொந்து
நித்தமுந்தொழுவோர்க்கு நிதமுமருளுமாபோல் நீதீர்
பருளைவாழ்வடிவேலா பரிந்தெனக்கருளாயோ
திருந்தியதமிழ்ப்பாவால் தேவேயுந்தனைப்போற்ற நீதீர்
வாழையின்வாழையான வழித்தொண்டனல்லோசாமி
வாழ்வைமகிமையாக வரமெனக் கோங்கவேதா நீதீர்

## திருப்புகழ்

அருணகிரிநாதற் கருளுபதேசம்
அருமையுடனே யருள் முருகோனே
அலர் மலர்மாலை யணிமணிமார்ப
அமரர்குறை தீர வருவோனே
குறமடமாது உறவணைமார்ப
குகமயமாக வருள் புரிவாயே
உனையடையாத குறையரிவீர
உனையலவாத பலர் உளவாமோ
எனையினிநாடி இறுகிடுநோயை
இனியொழியாது உற விடலாமோ
படியினில்மேவி அடியிணைதாவ
பருளையின்மீது வருவோனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியப்பா

கந்தாசரணம் கடவுளேசரணம்
கார்த்திகேயக் கண்யனேசரணம்
சங்கரன்தந்த சண்முகாசரணம்
முருகாசரணம் முதல்வாசரணம்
முடுகியபேரைக் கடுகியேயழைக்கும்
கலியுகவரதனே காப்பாய்சரணம்
காலமும்நேரமும் கருத்துடனன்பாய்
விரும்பியேபணிவோர் நிறம்பியகுற்றம்
நீக்கியேயாளும் நிமலாசரணம்.
சரணமென்றோதும் சத்தியவான்களுக்
கித்துணையுலகில் எல்லாமளித்துன்
திவ்வியபாதம் சேர்த்திடுமெய்யா
பன்னிருகையா பருணைவாழ்மெய்யா
பராசத்திசேயே பாக்யனேசரணம்.
துய்யாமெய்யா துலங்குவேற்கையா
அசுரரைக்கொன்று அமரரைக்காத்த
சுப்பிரமண்ய துலங்கிடுகண்ய
பவவினைதீர்த்து நற்பதமளிக்கும்
பருணைவாழ்சரவண பவனேசரணம்.
பாவியென்பல்நோய் ஆகியமேகம்
இருபத்தொன்றும் ஏங்கியே ஓட
வேலினையேவி வேலதுவறண்ட
பண்பதுபோல செய்வது நின்கடன்
பறுணைவாழ்சரவண பவனேசரணம்.
கந்தாவாவா கடம்பாவாவா
கலபத்தின்மேல் கடுகியேவாவா
முடுகியேயானுன் னடியவர்தமக்கு
கடமைகள்செய்யக் கதியதைத்தருவாய்
கங்கைவேணியன் கந்தனேசரணம்.
வேலாசரணம் விமலாசரணம்
விளங்குதண்டை வீராசரணம்
விஞ்சையர்போற்றும் விடங்காசரணம்
வித்தியாவிவேகம் வேண்டியான்கேட்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியேயருள்வாய்
கங்கையைக்கொன்றையைச்
சங்கரன்புதல்வா
எம்குறைதவிர்க்க
இன்னமுந்தாங்கிட
என்னகொடுமைகள்
கண்களைமூடியே
அனபிலாதவனியி
விடுவதோவுன்குணம்
சூழ்வினைபொறுக்க
ஓடியேயலற
சூரனைக்கொன்று
சரவணபவனே
பாராதிருப்பதென்
தீராதிருப்பதென்
காராதிருப்பது
சத்தியும்வேலும்
நித்தியமுந்தன்
உற்றநற்குறையை
வேற்கையுடைய
விக்கினமொன்றும்
தகித்திடாவண்ணம்
யருளுவதுந்தன்
பார்த்துப்பணிந்திட
அசுரரைக்கொன்று
ஐயனேயுன்றன்
னையுமென்னுவி
பன்னிருகையுடன்
திருவாரூரிலுன்
பருனையில்வாரும்
என்றவர்க்கோதி
இன்றெனைக்காப்பாய்
இறந்தவர்பிழைக்க
மந்திரசெபத்தை

வேலனேசரணம்.
கலந்தமேசூடிய
சரவணபவனே
இனிஎழுந்தருள்வாய்.
வெந்தணலாகுமோ
செய்தேனேயிப்பவம்
கொடுவினைநீடிட
லலைந்திடவேநீ
வேண்டினபேர்களை.
முடியாதமரர்
சாடியேவேலால்
தேவரைக்காத்த
சரணஞ்சரணம்.
பாவமோவிது
தொல்வினையோவிது
கடவுளேநன்றோ
சடுதியில்வந்து
நீணடிதொழுவோர்
ஒட்டிடும்வீரா
வேலவாசரணம்
வீணனைத்தானே
தற்காத்தென்னை
கடமையதாமே
பருனைவருவையே
அமரரைக்காத்த
அடியிணைபோற்றி
நின்னடிதாவப்
பருனைவாசரணம்
னடியன்போற்றிடப்
பலனதுநல்க
எடுத்துரைத்ததுபோல்
இறைவனேசரணம்
வரந்தனையுதவி
மாறிநீயோதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தநற்காட்சியை அளித்திட்டகந்தா
இந்தநற்தருணம் எனக்கருள்சரணம்
ஏதுநான்பாடுவேன் பேதகமாகியென்
மீதினைத்தாக்கும் வேதனைதவிர்த்து
பாதமளித்துயர் பதமதைநல்குவாய்
பருனைவாழ்சரவண பவனேசரணம்.

✻ ✻ ✻

## கும்மி

1. தத்திமுகவற்கிளையவன்டி அந்தத்
தண்கழனிப்பருனைவாழ்பவன்டி
குறத்தியைவேட்கத்திரிந்தவன்டி அக்
குமரனுக்கே கும்மியடியுங்கடி

2. பன்னிருகையுடைவேலனடி அவன்
பாவிவினையது தீர்ப்பவன்டி
துன்னியகரங்களுடையவன்டி நீறு
தூவிவினை தீர்க்கப்பாடுங்கடி

3. வள்ளிதெய்வயானை லோலனடி அவன்
புள்ளிமயிலேறும் வேலனடி
தெள்ளுதமிழாலே போற்றுதற்குத் திருக்
கள்ளனையே வேண்டியாடுங்கடி

4. சங்கரனீன்ற நற்சீலனடி அந்தச்
சண்முகனுகியபாலனடி
எங்குறைதீர்த்திட வீரனடி நீங்கள்
சங்கீத நாதத்தோடாடுங்கடி

5. ஆறுமாமுகவேலவன்டி அன்பர்
தேறிடவேவரம் நல்குவன்டி
குறமாதுடன் வந்துதோன்றிடவே மாறி
மாறியடித்துப்பாடுங்கடி

6. கைவளைகிண்கிணி ஒலமிட அந்தக்
கந்தனின் காதிலேயேறிடவே
கைகளை நீட்டியதிர்ந்திடவே இரு
கைகொட்டிக்கும்மியடியுங்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்மி

7. கலாபமயில் மீதுவருபவன்டி மனங்
கன்றினோர் குறைதீர்ப்பவன்டி
பருளைவாழ் வடிவேலவன்டி அவன்
பாதாரவிந்தமே போற்றுங்கடி

8. செங்கையில் வேலணிசெல்வனடி அந்தத்
தேவர்குறைதீர்க்க வந்தவன்டி
குருவாயுபதேசஞ் செய்தவன்டி அவனை
ஒருகாலும் மறவாமற்போற்றுங்கடி

9. சூரையுங்குன்றையும் துளைத்தவன்டி இவன்
சொக்கநாதர் பெற்றபாலகன்டி
பாரினிற்தேவரைக்காத்தவன்டி அந்தப்
பார்வதிமைந்தனைப்பாடுங்கடி

10. விடையவன் பெற்றபாலகன்டி எங்கள்
தேவனடி குருதெய்வமடி
சடையவனீன் றிடுமைந்தனடி சிறு
கந்தனையேபாடியாடுங்கடி

11. சரவணப்பொய்கையிற்றோன்றினான்டி சகல
தேவராற்போற்றிடப் பட்டவன்டி
கடலையுங்குன்றை யுமிறைத்தவன்டி அக்
கடவுளுக்கே கும்மியடியுங்கடி

12. செந்நெற்கழனிப்பருளையடி அந்தச்
சேவற்கொடியோன் றன்வாசமடி
நேசமுடனவளைப் பணிந்திடவே நிதம்
பாவமும்நாசமுந் தீருமடி

13. மஞ்ஞைகள் சூழ்ந்தடாகமடி அம்
மாமயிலோன்பண்ணும் வாசமடி
திங்களணிவேணியன் பாலனடி அவன்
எங்குறைதீர்த்திடப்பாடுங்கடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்மி

14. செங்கழு நீர்வாடைவீசுமடி அப்
பருளைவேலவனுடுந் தடாகமடி
எங்குறைதீர்த்திட இவ்வுலகில் அக்
கந்தனையே பாடியாடுங்கடி

15. குஞ்சரக்கன்றுக் கிளையவன்டி இங்கே
குருநாதராய்வந்த குமரனடி
கழனிகள்சூழ்பருளை வேலனடி இக்
கலிவினைதீர்த்திட வீரனடி

16. பருளைவாழ்வேலனைப் போற்றினேர்க் கிப்
பவவினையெல்லாம் பறந்தோடுமடி
குறத்திமகிழன்னபாலனையே நீங்கள்
கும்மியடித்தினை பாடுங்கடி

17. வைகாசிவிசாகம் வருபவன்டி அங்கே
வந்திடு நண்பர்க்கருள்பவன்டி
பன்னிருகண்கள் விழிப்பதனால் எம்
பழவினை நீங்கிடப்பாடுங்கடி

18. தொல்லுலகில் நல்லோர்போற்றிடவே வேலர்
எல்லாவரங்களு மீந்திடுவர்
மல்லிகை முல்லைகள் பொருந்தியநற் சோலை
எல்லையிலேநின்று கண்டிடலாம்

19. விசாகத்திலன்றுனைப்பார்த்திடவே இரு
விழிகள் போதாது நின்றேத்திடவே
பருளைசூழ்வயல்தனில் வருபவனை நீங்கள்
பாடிக்கும்மி யடியுங்கடி

20. மேகமொடுதாகம் நீங்கிடவே வள்ளி
பாகனையேபோற்றிப் பாடுங்கடி
பாதத்தைக்கிட்டிச் சேர்ந்திடவே கைகளை
நீட்டிக்கும்மியடியுங்கடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவல்

சத்திக்கணபதிக்குச் சோதரனேசண்முகனே
நித்தியமுமெந்தனுக்கு நீயருளநற்கதியை
பத்தியுடனுந்தனையே பண்பாய்நான்பணிந்திடவே
சத்திதெய்வ வள்ளியர்கள் தம்முடனேவந்திடுவாய்.
பருத்தவயல்மீதில் பவனிவரும்வேலோனே
பக்திவலையைவிட்டு மயக்கவலையிற்பட்டு
எட்டுத்திக்குந்தெரியாமல் இறைஞ்சிநின்றுவாடுகிறேன்
இத்தருணமோடிவந்து எந்தனையோகாத்திடுவாய்
தேவர்சிறைமீட்டவனே தேவேந்தரனைக்காத்தவனே
சங்கரன்தன்பாலகனே சத்திவடிவேலவனே
குன்றைத்துளைத்தவனே சூர்மார்பைக்கிழித்தவனே
பத்தியுடன் நான்பணிந் தேன் பருத்திவடிவேலவனே
வேங்கைமரமானவனே வேனம்பியோன் மருகா
மான்கன்று ஈன்றெடுத்த மாயவள்ளிகாவலனே
தேனேயமுதேயென் தித்திக்குஞ்செங்கரும்பே
சேவற்கொடியோனே தேரேறிவந்திடுவாய்
மாங்கன்றாய்வந்தவனே மாருடிக்கிழித்தவனே
வேறுவேறுவிதமாக வேண்டியவன்வடிவெடுக்க
தாறுமாறுபோலாகத் தலைதுணிந்துவிட்டவனே
நாறுமலர்தூவி நமஸ்கரிக்கவந்திடுவாய்.
வளையற்செட்டியாகி வகையதிகவளையலோடு
தையல்வள்ளிநாயகியைத் தான்தேடிக்கண்டவனே
மெய்யுடனுன்தனையே வேண்டி நான்வணங்கினேனே
பச்சைமயில்மீதேறி பருத்திவயல்வந்திடுவாய்
வள்ளியைக்கொள்ளைகொள்ள மெள்ளமெள்ளத்தன்னாடி
ஊன்றுகோல்கைபிடித்த ஒட்டைக்கிழவனாய்
தஞ்சமின்றியிங்கிருந்து தவியாமலுந்தனையே
தான்பணிந்துவாழ்வதற்குத் தயைபுரிந்துவந்திடுவாய்.
தேனுந்தினைமாவுமுண்டு தீர்த்தம் குடிக்கவென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுசுனைதேடிக் கைக்கொண்டுசெல்லென்றாய்
வினையறியாவேடுவிச்சி வேண்டியதைச்செய்திடவே
காட்டிலேநின்றுகொண்டு கணபதியைத்தானினைந்தாய்
மத்தகயவேடமதாய் வந்துவிடமுன்னவனும்
மெத்தப்பயந்துமிக வெதும்பியவனேங்கிடவே
நித்தமவள்சேவிக்கச் சத்திதுயராற்றினையே.
பத்தியுடன்போற்றிடவே பருளைவயல்வந்திடுவாய்
வேடுவச்சகோதரர்கள் வேண்டியவளைத்தேடி
மெள்ளவிருவரையுங் கானகத்திற்கண்டிடவே
கொன்று அவர்கட்குமோட்சம் கொடுத்திடரழித்தவனே
குன்றாதநற்கதியைக் கொடுத்தெனையாளுவையே.

## விருத்தம்

வனத்தினிற் றனித்தமானின் மதலையாம் வள்ளிதன்னை
கனத்துடன் புனத்திலேதான் கருத்துடன் அணைவதாக
மனத்தினில் மையல்கொண்டு மரையுரி வேடனாகி
தினைப்புன மீதுசென்ற சேவடி போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருளைக் கந்தசுவாமி பேரில்

# எழுசீர்க் கழிநெடிலடியாசிரியக் குறள் விருத்தம்

1. நன்மணி யழுத்திய நவரத்ன முடியொடு
நன்னுதலா றிலங்குவ தனங்களும்
பன்னுப லவடியர் பருகவரு ளொழுகிடும்
பன்னிருமா மலர்மணி விழிகளும்
பத்தியு ளோற்குநற் பதமளித் திடுவோமெனும்
பவளவிதட் குளுறைமுத் தநகையும்
பாரினை யலைத்திடு அசுரரை யழித்திடப்
படையுடைப் பன்னிரு கரங்களும்
பாக்கியம் புரிபவர் பவவினை யறுத்திடப்
படியினிற் பொருந்திய வடிகளும்
கண்டுநான் பணிந்திடக் கருணைபுரி கர்த்தனே
கழனிசூழ் பருளைவந் தருள்வையே

2. அன்றுமே குழந்தையா யயனுட னகத்தியற்
காசிரி யராகிநின் றகுருவே
மன்றின டனம்புரி சங்கரற் கன்றுநீ
சென்றுமே குருவா னமணியே
தேடியே யருணகிரி யேத்திநின் றிறைஞ்சிடத்
தென்னிசைத் தமிழளித் தகுருவே
திக்கெலாம் நோக்கியே நின்னடி தொழுபவர்க்
கின்னலழித் தாட்கொண் டமணியே
தேவரிடர் தீர்த்துமே நவரத் னமகிடந்
தேவேந் திரற்களித் தகுருவே
பாவிநான் போற்றிநின் பதமல ரிறைஞ்சிடப்
பருளைவெ ளிமீதுவந் தருள்வையே.

3. கொன்னெறு ழிதன்னுருக் கொண்டுமால் தேடிய
கொற்றவர்க் குற்ற புதல்வா
கன்றுமா னைங்கரன் பங்கிலுறை மங்கையின்
கண்களிக் கவந்த மகிபா
கற்றவர் களின்மனங் கன்றிவாடா தவகை
கருணை யோடருள் புரிகுவாய்
கர்த்தனே முத்தனே கருதிடு வோர்க்கருள்
கார்த்திகே யனனவேற் கையனே
கண்டவ ருவந்துநற் கண்டென வுட்கொளும்
கடம்பமா லையணி மார்பனே
கண்டுநான் பாடியே கரங்குவித் தேத்திடக்
கழனிசூழ் பருளைவந் தருள்வையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஐவரினடுப் பிறந்த வர்ச்சுனுன வடியன்
மெய்வருந்தித் தவம்புரிந் தபோது
ஐங்கரனேர் பங்கமில் வேடனுய்த் தோற்றியே
தனஞ்சயற் கருளளிக்க வில்லையோ
ஆனதோர ருபத்தி மூவருக் காங்காங்கு
நற்பத மளித்தான வில்லையோ
ஆறென்ன செய்த போதிலு மவரவர்க்
கரனுர்நற் பதமளிக்க வில்லையோ
சிக்கனவே யுந்தனைச் சிந்தையி னுட்டினேன்
சிங்கார வேலனே லோலனே
சிறுவனின் கொடுவினை யகற்றிடச் சிறந்தநற்
கழனிசூழ் பருளைவந் தருள்வையே.

5. முளைத்தெழு கமலத் தரும்பென வரும்பு
முகிழ்முலைக் குறமங்கை தன்னெடும்
வளைத்தெழு மாதுளங் கனிபோல்வட்டித்
தெழுந்தனத் தெய்வயானையுடனும்
சூரனுகி நின்றுமே யமர்பொருத முடியாது
சென்றுமே கொடியான சேவலுடனும்
சூழ்ந்தநற் புவிகளை யோர்நொடிப் போழ்தினில்
சுற்றியே பவனிவரு வாசியுடனும்
அபாயமென் றஞ்சியே நெஞ்சிலே பணிபவர்
அடையு நற்றுள் களுடனும்
அடியனுன் கண்டுமே தரிசித்து வாழ்ந்திடக்
கழனிசூழ் பருளைவந் தருள்வையே.

6. தண்டமிழ் பிறந்தநற் தலமதான மதுரைப்
பாண்டிய னடுபரி வேண்டியே
தன்பொன் னதில்வெகு கோடியளித் தனுப்பிய
திருவா தவூ'நறை மகிபனைத்
தேவர் களேத்துநற் திருப்பெருந் துறையிலே
சேர்ந்தநற் குருந்த நிழலிலே
வேத மோதிடு வேதியர்கள் போலவுந்
தேவதே வனேர்தேசி கனுகவும்
நேத்திர சாத்திர தீட்சை யெலாமளித்
தாண்டடி மையதாக் கியநற்
தேவனின் மைந்தனே தேடியோற் குகந்தனே
தேனிசூழ் பருளைவந் தருள்வையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மேகமான தென்தேக மானதை யொடுக்கி
யென்பதை யுருக்கி யேவெகு
மழையதா யிறைக்குதே யியக்க மின்றியே
மெய்தனை மறக்க வைத்துமே
மெத்தமிக வேவிழி முகத்தனல் பறந்து
முழுவு டலதைத் தாக்கியே
மனதினைய லைத்துமே மார்பினை வறட்டியே
மறுமையை நினைத்திடப் பண்ணியே
பலதரமென் னுயிர்தனைப் பதைத்திட வாட்டுதே
படிதனிற் குகனலாதி துநீக்கிடப்
படுவதோபார் வதிதனக் கரிய மைந்தனே
பருளைவெ ளிமீதுவந் தருள்வையே.

8. ஆனைமா முகன்தனக் கிளையவாறு மாமுகனே
அம்பிகை யானவடன் மைந்தனே
அரிவா சுதேவ வைகுந்த கோபாலக்
கண்ணனி னரியதிரு மருகனே
குந்திமைந் தருக்கு வாய்ந்தநற் துணைவனான
கோவிந்த னருள்திரு மருகனே
தொல்புவி யதனிற் தொழுதேத்தி வாழ்த்திடுவோர்
தொல்வினை யறுத்தாதரித் தமணியே
தேவகன்னி யர்வந் தாடிடுந் தடாகமு
மதைமரு வியவரசொ டுவேப்பயர்
தென்னைகள் சூழ்ந்திடுஞ் சோலைக ளமர்ந்தநற்
பருளைவெ ளிமீதுவந் தருள்வையே.

9. மொய்தா ரணிகுழல் வள்ளியை மெய்யன்
பொடுறத் தழுவி யணைந்திடு
மெய்யுடைக் கடவுளே மிகமன வலிமை
யொடுனதி ருமலரி ணைபற்றியும்
பெற்றிலே னினிக்கட வுளே நீ யெற்றியே
விட்டபோ திலுமின் பநற்பதி
பெற்றுமே வாழ்வதற் குற்றது ணையான
தெப்பமென் றேயுல கறஞர்
செப்பு கின்றநற் சரவண பவனெனும்
பத்திர மலாதுவே றுமலர்
பற்றிடா தன்பத மலரிறைஞ் சியேத்திடப்
பருளைவெ ளிமீதுவந் தருள்வையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நானென்ன செய்குவேன் நயனமிடு குருவே
நலிந்துமிக வாடிநா னலைகிறேன்
நன்னெறிய ளியென்று நானுனையி ரந்தாலும்
நின்பன்னிரு கண்களை மூடியே
யெனைப்பார்த்த ருளாதிருப் பதென்பாவ மோவிது
நின்மனங்க ரையாதபெருங் கல்லோ
வேலவாவென் றுமேயொ ருதரஞ்செ பித்திடில்
வேண்டியவை யெலாம ளித்திடும்
வேலனேலோ லனேவிண் ணவரினிடர் தீர்த்த
சீலனேயென் தீவினை யகற்றியே
சோதியொடு ஞான வொளியளித்தி டமயிற்
றேகையிற்ப ருளைவந் தருள்வையே.

11. சற்றுமோர் சிறுவடு வந்தெய் திடினு
மற்பநே ரந்தரித் திடினும்
அற்றுமே புழுவொழு குமாக்கை யதையொரு
வருமை நிலமைப் பொருளெனப்
பற்றிநா னுனையிரந் ததன்று பாரினிற்
பற்பல பிறவி களிலுன்
நற்பதம் பணிந்திடு தற்குற் றதுவிது
வென்றுநா னிரந்த தல்லா
திவ்வுல கினிற்சிறு விடயவின் பத்தையே
நாடியி ரந்ததென் றுகருதா
திப்புவி யுளோரிறைஞ் சியேதரி சித்திடு
நற்பரு ளைவந்த ருள்வையே.

12 கன்றுனது தள்ளிப் பசுவிலே பாய்ந்திடினுங்
கன்றைவிட்ட கன்றிடவது விரும்புமோ
பிள்ளையான துவெகுகுற் றங்கள் செய்திடினுந்
தள்ளிவிடு வளோதா யிடருறில்
சிறுவர்க ளெவ்விதக் குறைகள் செய்திடினும்
பெரியவர்க ளக்குறை யாள்வரோ
வெறியுடைவீ ணனெத்தனைக் குறைகள் செய்திடினு
மறிவுடைக்க டவுளே யவையெலாம்
அவனியில திபுதின மலவென் றகற்றியே
யடியனின்தீ யநோய்நீங் கியோடிட
அறிவினையு டையோர்கள் கமகிழ்ந் தபோற்றுஞ்
சுழிபுரப் பருளைவந் தருள்வையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. எத்துனைப் பிறவிக ளிலுமா னிடப்பிறவி
யேத்தியே கடவுளை வாழ்த்திட
மெத்தமி குமேன்மையொத் ததெனவ றிந்தபோதும்
பத்தியு டனின்பதம் பற்றிடப்
பழவினை விடாமலென் மதிதனை மயக்கிட
நித்திய மிளுக்குதேயதை யறுத்திடச்
சித்திரக் கலபமீ துசத்திமார் தம்மொடுங்
காத்துமே நிற்பத லாமலுந்
தமியே னையித்தரு ணந்தாக் கிடுநோ
யகற்றியே யுள்பத மளித்திடத்
தாமோ தரன்மரு கனேயவன் மைந்தனுக்
குத்திருப் பருளைவந் தருள்வையே.

14. மனமான தேதுஞ் சிறுவிட யமுற்றிடி
னின்பதம லரதை நினையாது
கனவிதங்கு ழம்பியே யாணவ மெழும்பியே
யென்னறிவி னைமிக மயக்குதே
அக்கொடும லத்தின ருவினைய கற்றிடா
தவனியில லையவிடு தனன்றோ
மைக்கழுத்துற் றவொரு சங்கரன் புதல்வனே
வைகுந்தகோபா லன்திரு மருகனே
இக்கொடுவி னையினை யகற்றியே நின்பத
மலரதைப் பணிந்து வாழ்ந்திடத்
தக்கநற்பு லவோர் களேத் துநற்சுழி புரத்தண்
கழனிசூழ்ப ருளைவந் தருள்வையே.

15. சிறுகிள்ளை யொன்றினை விரும்பியே கவனமா
யிடருரு வகையதைக் காத்துமே
சிறுமொழிய துவறைந் திடும்படி கருதியே
முயன்றபோ ததுசெவி கட்கிதம்
பயின்றுநின் றி டுகாலை யிலொரு பெரிய
பூனையா னதுவந் ததனுயி
ரகற்றிடச்சிக் கெனுமபடி யதின்சிறு தலைதனைப்
பற்றியே பிடித்திட் டபோதிளி
லச்சிறுகின் ளையையா திரித்திட் டவர்க
ளருகிருந் தசகிப் பரோமனம்
அத்துணையெ னையவித் திடுகொடு நோயறக்
கழனிசூழ் பருளைவந் தருள்வையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கந்தாசி லம்பாக ருணைபுரி கர்த்தனே
கடம்பமாலை யணிந்திடு மார்பனே
காங்கேய னேகருது பவர்க்கருள் கடவுளே
கருமுகிற்கண் ணனருள் மருகனே
சத்திவடி வேலனேச ரசசல் லாபனே
சக்கராயு தன்தரு மருகனே
தண்டாயு தக்கடவு ளேதரித் திரற்கருள்
தன்னிகரில் லாத மணியே
தந்தைமாங்க னிக்காய்த் தாரணி சுற்றிய
தருமருவு சிங்கா ரவேலனே
தக்கோர்க்க ளேபுகழு நற்சுழி புரப்பதிக்
கழனிசூழ்ப ருளைவந் தருள்வையே.

17. குறத்தியைய ணைந்திடக்கூ னற்கிழ வனுகிக்
கூட்டியேகா னகஞ்சென் றமுருகா
உற்றதுணை நீயலாது வேறோர் கடவுளு
மிக்கலியு கந்தனி லுண்டோ
அன்றுமேதே வருக்கசு ரரைக்கொன் றிடரழித்
தாட்கொண்ட தொருதிரு மணியே
ஆனமாமு கன்தோற்ற வேயவள் பயந்திட
வாறுமாமு கமானதோர் மணியே
ஆதரவி லாமலே யவனியி லளுந்து
மென்கொடிய நோயகற்றி யாண்டிட
அரியபுல வோர்களேத்து நற்சுழி புரத்துறை
கழனிசூழ் பருளைவந் தருள்வையே.

18. அன்றுநர சிங்கமாய்ப் பிரகலா தனற்களித்த
தன்றியும்வி பூஷணர்க் களித்ததும்
அன்றுமே யைவருக்கெவ் விதவிட ருற்றபோது
மவையவைய கற்றியே யாண்டதும்
பூமிபாரந் தீர்த்திடப் பூதலமீ தோர்முறை
நரனும்நா ரணனுமாய் வந்ததும்
நடுச்சமர்க்க ளத்திலே யரியசா ரதியாகி
நரன்தனின் றேரூர்ந் துநின்றதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுவேறு மதிகபு துமைகள் செய்திட்ட
கோவிந்தக் கோமான் மருகனே
ஆதரவி லாதகொ டியனுன் போற்றிடத்தண்
கழனிசூழ் பருளைவந் தருள்வையே.

19. ஆடியென் பாடியென் அன்பொடுந் தொழுதுமென்
அர்ச்சனை களைத்தினஞ் செய்துமென்
அன்பொடு பணிந்துமென் அரியப ணிசெய்துமென்
அன்னதா னங்கள ளித்துமென்
அஞ்சிநான் வாடியே யுன்னடி நாடியென்
அருந்தவ ரையேயா தரித்துமென்
அரியபா வியாகிய வென்னை நின் னடியனுக்
கியேய ருந்துயர் நீக்கியே
கொடுவ மர்புரிந் துடம்பினைத் தாக்கிய
கொடிய நோயகற் றிடாவிடின்
கலியுக வரதனென் றழைத்தல் பிழையாது
கழனிசூழ்ப ருளைவந் தருள்வையே.

20. பருளைவடி வேலனே பலதரமி றைஞ்சினே
னீயெனக்கு ஞானவ ருள்கொடு
பற்றியேயெ னைவாட்டி டுநோய கற்றிடப்
பத்திநிலை யதனை யுங்கொடு
மதிகொடுநன் னிதிகொடு உன்னடியார்க் குயான்மிகு
தொண்டுகளே செய்திட வழிகொடு
மனதிலுன்மந் திரசெபம் மறவாது செபித்து
நின் றிடநல்வ ரங்கொடு
மானி லந்தனிலோர்பிற மாதினைநி னையாமலே
யில்லறத் தொழுகநல் லிடங்கொடு
மாணிக்க மணிமார் பனேயிவையெலாமளித்திடக்
கழனிசூழ்ப ருளைவந் தருள்வையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீர்த்தனங்கள்

## வேலாயுதா குமரா (என்ற மெட்டு)

பாலா பருளை வாழும்
வேலாவெருமையாழும் குகபாலா

பாடியேயுந்தனை நாடினே னருள் குகபாலா

பக்தியுடன்மிகவே பக்தர் பணிந்திடவே
சித்தியுடனவர்க்கு நித்தமருளளிக்குங் குகபாலா

மிக்கவருந்தியுடல் தொக்கக் குறைந்திடவே
மெத்தவு முந்தனை நித்தமும் பணிந்திட்டேன் குகபாலா
சிக்கியெனதுடம்பில் மிக்கவருத்தகின்ற
மேகநீர் தீக்கிட வேண்டினேனுந்தனை குகபாலா

## இந்தியாவி லிரண்டு (என்ற மெட்டு)

பாரிற்பலபிணிகள் வீறிற்குறைந்திடவே
பாலனைப்பணிவோமே பருளைவாழும்
வேலனைப்பணிவோமே
அத்தனையசுரரையறுத்துமே தொலைத்
தமரரிடரழித்தருணல்கிய
ஆனந்தமானவேலனை யருமையுடன்
தானேயிந்தலோலனை பாரிற்

முன்னாளிற் ப்ரமனுக்குத் துன்னுதுபதே சஞ்செய்த
ஞானகுருவானபாலனே அடியேன்வாழ
தியானகுருவானவேலனே
எதுமீடில்லாத வருணகிரியாரருள்
செய்திடுதமி ழாரத்தைத்தாங்கிய
தண்கழனிப்பருளைவேலனே தரித்திரற்குத்
தானருள்புரியுஞ்சீலனே பாரிற்

புனத்திற்றனித்திருந்தாள் தனத்தைத்தான்பார்த்திடவே
பழையகிழவேடங்கொண்டோனே பருளைவரும்
பத்தர்தமக்கனுகூலனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியுடனேயுனை நித்தமுந்தொழுதிடப்
பாரினிலேயெனக்குப்பலவருள் நல்குவாய்
பார்வதிதனக்குமைந்தனே பருளைவந்து
பணிபவற்குவந்தோனே — பாரிற்

சீரிற்பலகுறைகள் பாரிற்பறக்கடிக்கும்
பரமன்விழித்தகந்தனே பருளைவரும்
பாவிகட்கருள்சந்தனே

இதமுடனெனதுடலுறு பிணியகற்றிட
விருகரமலர்நிறை நீற்றினைநீ
தூவியேயோட்டுவீரே கொடுநோயை
மாறிடத்தாக்குவீரே — பாரிற்

தசரதராசகுமாரா (என்ற மெட்டு)

கழனிசூழ்பருளைவாழ்வேலா வள்ளிலோலா
சிவன்பாலா அதிசீலா — கழனி

தரணியிலுனையன்றித் தயைபுரிவர்களாரு
தரித்திரர்தம்மிடி தனையறுத்திடுவாராரு
குறத்தியுடனேமயிற் றேகையிலேவாரும்
நின்னுளந்தனில் வரமருளக் கோரும்
எனைப்பாரும் வினைதீரும் — கழனி

கொடியவசுரர்வினை பொறுத்திடமுடியா
கடுகியேயரனடி யமரர்கள்முடிதொழ
அவர்வினையோடி யகன்றிடும்படியே
அசுரரைக்கொன்றிட்ட வேலா
சத்திலோலா சரவணபாலா — கழனி

இனியெனதுடலுறு நீரிழிவினைநீக்க
இரங்கிடாமலேநீ இருந்திடலாமோ
இதுகாலுமுனைநான் இரந்தலைந்தேனே
இங்கெழுந்தெனக்கருள் தாராயோ
இதைத்தீராயோ கண்பாராயோ — கழனி

வாழி

பச்சை மாமயிற் பருளைவாழ் வேலனை
யச்சமின்றியே யார்தொழு தேத்தினும்
இச்செக மீதினி லின்பமுற் றோங்கியே
நிச்சய மாகவே நீடூழி வாழ்வரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

# உலக நெறி

அருட்செல்வமேயரியதெனவறியவேண்டும்
அரியதமிழ்நீதிகளையாராயவேண்டும்
ஆதரவிலாதவர்க்கன்பாயிருத்தல்வேண்டும்
இரக்கமில்லாதவரோடிணங்காமைவேண்டும்
ஈயாதவர்களுக்கின்பமிலையெனவறியவேண்டும்
உற்றாரோடுறவுகலந்திருத்தல்வேண்டும்
ஊரவற்கொருகுற்றமுஞ்செய்யாதிருத்தல்வேண்டும்
எவ்விதத்தவங்கள்செய்துமீசனையேயடைதல்வேண்டும்
ஏழைகளையெப்பொழுதுமிரட்சிக்கவேண்டும்
ஐயமேயெடுத்துமதிதிகட்களிக்கவேண்டும்
ஓதியநூல்வழியேநின்றொழுகல்வேண்டும்
ஔவைநூலாராய்ந்ததன்வழிநிற்கவேண்டும்
பழையவினையழித்திடப்பருளைவயல்மீதமர்ந்த
வளையலணிவள்ளிபங்கனைவாழ்த்தாய்நெஞ்சே
கற்றோற்கேயுற்றகுறையுரைத்தல்வேண்டும்
கார்த்திகேயனையேகலியுகந்திலேத்தவேண்டும்
கிட்டநின்றேயொருவர்குறைபேசவேண்டும்
கீழானதொழிலாளர்க்கின்பமாயிருத்தல்வேண்டும்
குற்றமற்றபெரியோரையேபேணவேண்டும்
கூசாமலுண்மைதனைப் பேசவேண்டும்
கெடுதிவருமுன்னமேநற்கதிதேடவேண்டும்
கேடுநினையாமலே யடுத்தோரைக்காக்கவேண்டும்
கைத்தொழிலதிகமாய்விருத்திசெய்யவேண்டும்
கொலைபாதகர்களைத்தண்டிக்கவேண்டும்
கோதுமையதுவிரும்பியேயருந்தவேண்டும்
பழையவினையறுத்திடப்பருளைவெளிமீதமர்ந்த
விளையபெருமாளையேத்தியிறைஞ்சாய்நெஞ்சே
சரியானசாஸ்திரங்கள் வெகுகோடி கற்கவேண்டும்
சான்றவர்க்கேசற்குணனாயிருத்தல்வேண்டும்
சிங்களமுமாங்கிலமுஞ்சேரவேகற்கவேண்டும்
சீனிசேர்பண்டமருந்தாதிருக்கவேண்டும்
சுக்கிலமோசங்கள்செய்யாதிருக்கவேண்டும்
சூதுவாதுகள்நினையாதிருக்கவேண்டும்
செகத்திலேநாமொருசாதியாய்ச்சிறக்கவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைசெய்யாமலேநெசவதுசெய்யவேண்டும்
சையினியமுண்டாக்கியேசண்டைகள்பழகவேண்டும்
சொய ஆட்சிசெய்வதற்கறிவுடையோராகவேண்டும்
சோதனையைவிட்டுமேசாதனையைநாடவேண்டும்
தைரியமிலாதவற்கரியவிடர்தீர்த்துநற்
கதியதையளித்திடுபவனைவாழ்த்தாய்நெஞ்சே
தமிழதையோதியேதழைத்திடச்செய்தல்வேண்டும்
தானமெப்பொழுதுந்தரித்திரற்கீயவேண்டும்
தினமுஞ்செய்கடன்செய்துநீவாழவேண்டும்
தீயதுவிளைக்குமாதரைவிரும்பாதிருத்தல்வேண்டும்
துர்ப்போதனைகளைச்செய்யாதிருத்தல்வேண்டும்
தூதுசெல்லாமலேசாஸ்திரங்களோதவேண்டும்
தெற்குநோக்கியேநீதனந்தேடவேண்டும்
தேயமேதிரிந்துந்திரவியந்தேடவேண்டும்
தைரியமடையவேபலவுணவருந்தவேண்டும்
தொகைகூடுசபையோடுகூடியேயொழுகவேண்டும்
தோல்வியடையாதவழிநூரந்துமேநிற்கவேண்டும்
சங்கரனாரீன்றெடுத்தசத்துருசங்காரவேற்
குமாரனைக்கரங்குவித்துவாழ்த்தாய்நெஞ்சே
நற்காந்திமகான்கைருட்டைக்கையாளவேண்டும்
நாடெல்லாம்நம்துணியேயுடுக்கவேண்டும்
நிதமுமுன்கடமைகளைநீமுடிக்கவேண்டும்
நீவாழ்வதற்குவன்னியைத்திருத்தவேண்டும்
நும்பெருமையங்குபயிர்செய்தேயறியவேண்டும்
நூனூற்கும்பருத்தியையங்குநாட்டவேண்டும்
நெல்விளைவுநேராகவேநீசெய்யவேண்டும்
நேயமுடனங்குசெல்லவேமுயலவேண்டும்
நைந்துமிகவருந்தாதுவாழவேண்டும்
நொந்தவரையிகழாதிருத்தல்வேண்டும்
நோன்பிருந்தால்நிஷ்டையுடன்முடிக்கவேண்டும்
நாவலர்களேத்திநின்பதமதுபணிந்திடப்
பருளையுறைபவனைவாழ்த்தாய்நெஞ்சே
பலனற்றபோதிலும்பண்ணியதவம்புரியவேண்டும்
பாக்கியமிலாதபோதிலுந்தாயையேபோற்றவேண்டும்
பித்தனேயானாலும்பிதாவையேபணியவேண்டும்
பீதாம்பரமானாலுமிரந்தவர்க்கீயவேண்டும்
புல்லனானாலும் பெலனறிந்துமே பகைக்கவேண்டும்
பூபலவினமானாலும்நறுமலர்தூவியேதுதிக்கவேண்டும்
பெற்றோர்கள்பிழைசெய்தாலும்பேணவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரானகாரியத்தைத் தவிராதிருக்கவேண்டும்
பைத்தியக்காரனானாலும் பசியதைத்தணிக்கவேண்டும்
பொன்னதிகமானாலும் நீதிவழுவாதிருக்கவேண்டும்
போகாதவிடந்தனிலேபோகாதிருக்கவேண்டும்
பெரியவயல்சூழ்பருளையுறைகரிய
மயில்மீதேறுபவனைவாழ்த்துவாய்நெஞ்சே
மழை மாரிபெய்திடப்பரனையேபோற்றவேண்டும்
மாதற்கேதமிழ்க்கல்வியேற்றவேண்டும்
மித்திரர்களுக்கேமிகு துணைபுரியவேண்டும்
மீருத பேர்களுக்காருத்துயர்தீர்க்கவேண்டும்
முத்திபெறுகதியிலேநின்றொழுகவேண்டும்
மூத்தோர்வார்த்தையையேகைப்பற்றவேண்டும்
மெஞ்ஞானவுணர்ச்சியைமெச்சவேண்டும்
மேலானபதவியையேநாடவேண்டும்
மைதவாமலமகற்றியேவாழவேண்டும்
மொண்டுதற்கேநன்னீரளித்தல்வேண்டும்
மோகமானவலையிலம்பிடாதிருத்தல்வேண்டும்
மைக்களுத்துற்றமயிலேறிவிளையாடு
மதிநுதலம்மைமைந்தனைவாழ்த்தாய்நெஞ்சே
யயாதிபெற்றெடுத்தபுருருவைப்போல்வாழவேண்டும்
யாசகற்க முதளித்துமேயனுப்பவேண்டும்
யுத்தியாலனுபவத்தால்யூகித்தொழுகவேண்டும்
யூக முடனேயெக்காரியமும்முடிக்கவேண்டும்
யௌவனம் நீ யெனக்களிக்கவேண்டும்
கழனிசூழ்பருளைமீதுமயிலேறிவரு
குகனையேயேத்திவாழ்த்தாய்நெஞ்சே
வறியவர்க்கறியாதபொருளோதவேண்டும்
வாலிபத்திலேபிழைசெய்யாதிருக்கவேண்டும்
விக்கினம்வந்திடினும்விசனமில்லாதிருக்கவேண்டும்
வீரனேயானாலும்விவேகிகள்புத்திகேட்கவேண்டும்
வெங்கபற்பமேமேகத்திற்குண்ணவேண்டும்
வேந்தனேயானாலும்விதியறிந்தொழுகவேண்டும்
வையிரமாய்மனமிராதொழியவேண்டும்
வயல்பலசூழ்பருளையுறைகரியமயிலேறு
கந்தனையேவாழ்த்தியிறைஞ்சாய்நெஞ்சே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறுபல

தன்னுயிர்காப்பினுந்தான்கொலைசெய்யாதுவேண்டும்
தன்னேயருக்காறைலும் நீதிவழுவாதிருக்கவேண்டும்
செல்வமில்லாதபோதும்சிவனடியார்க்கீயவேண்டும்
உத்தியோகமானலுமொறுப்பனவாய்நடக்கவேண்டும்
வெகுசெல்வனானலும்வித்தையேகற்கவேண்டும்
பாரானசபையிலேநேராகநீதிபேசவேண்டும்
ஏழைகளுக்காகவேஎப்பொழுதும்வாதிக்கவேண்டும்
செல்லாவிடந்தனிலேசெல்லாதிருக்கவேண்டும்
செய்யத்தகாதவைசிறுவர்செய்யாதிருத்தல்வேண்டும்
மேனாட்டுவழக்கத்தைப்பழகாதிருத்தல்வேண்டும்
காசியாத்திரையெத்துணையுஞ்செய்யவேண்டும்
மானுடப்பிறவியானலுமதன்பயனறியவேண்டும்
உன்னுயிர்கொடுப்பினும்முயிர்க்கொலைதவிர்க்கவேண்டும்
பாவியேயானலும்பாவங்கள்தவிர்க்கவேண்டும்
கள்வனேயானலுங்கடவுளையேபோற்றவேண்டும்
கனசெல்வனானலுங்கலந்துமேயுண்ணவேண்டும்
வெகுமானியானலும்விருப்புடனளிக்கவேண்டும்
கோமயமிட்டுமேவீடதுமெழுகவேண்டும்
சங்கரனீன்றெடுத்தசத்துருசங்காரவேற்
குமாரனைக்கரங்குவித்துவாழ்த்தாய்நெஞ்சே
வரகொடுகோதுமைவிரும்பியேயருந்தவேண்டும்
காணு நகாரியத்தைப்பேசாதிருக்கவேண்டும்
தெய்வத்தைநிந்தனைசெய்யாதிருக்கவேண்டும்
சுமஞ்செய்பவர்களையேயிறைஞ்சவேண்டும்
சிறிதுபெரிதுநீபாராதிருக்கவேண்டும்
சாதியென்பதுதொழில்பாகுபாடெனவறியவேண்டும்
தொழில்மாறுவதைத்தடாதிருக்கவேண்டும்
தந்தைவேறுமகன்வேறுசாதியாகுமெனவறியவேண்டும்
ஒழுக்கமேசாதியாகுமெனவறியவேண்டும்
பிறவிமுன்னேற்றத்துக்குத்தடையிலாதிருத்தல்வேண்டும்
தந்தைதான்செய்கடனைச்செய்யவேண்டும்
தனைநம்பிவந்தவர்களைக்காக்கவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதவம்புரிவோரையேபோற்றவேண்டும்
மானிலத்திற்கல்வியேகற்கவேண்டும்
கண்டவர்சிரியாதிருந்தொழுகவேண்டும்
கன்னியர்களிச்சையைநீக்கவேண்டும்
பிள்ளைப்பிராயத்திலேவித்தைகற்கவேண்டும்
பெற்றோரடிவணங்கியொழுகவேண்டும்
பேரானநோய்தவிர்த்தவர்க்கேபொருளளிக்கவேண்டும்
பிள்ளைகள்தெட்சணைகுருவுக்கேகொடுக்கவேண்டும்
பிச்சையெடுத்தாலும்வித்தையேகற்கவேண்டும்
கற்கவேண்டியதைக்கசடறக்கற்கவேண்டும்
வேண்டியபேர்களுக்கேதொண்டுகள்செய்யவேண்டும்
பாண்டமானவுடம்பிலேநோயிலாதிருக்கவேண்டும்
வேழாண்மையைவிரும்பியேசெய்யவேண்டும்
தங்கணவரேகடவுளெனமதிக்கவேண்டும்
தைரியமிலாதவற்கரியவிடர்தீர்த்த நற்
கதியதையளித்திடுபவனைவாழ்த்தாய்நெஞ்சே
பிள்ளைக்குப்பெற்றோர்கிரியையேகடனுகவேண்டும்
செய்நன்றிமறவாதிருக்கவேண்டும்
தந்தைசொல்மந்திரமெனமதிக்கவேண்டும்
தாயையேகோவிலெனமதிக்கவேண்டும்
வேதநெறியையேகைப்பற்றவேண்டும்
வெஞ்சினமடக்கியேவாழவேண்டும்
உதவிபுரிந்திடிலத்தினம்புரியவேண்டும்
இவ்வுலகினிற்சிறைப்படாதிருத்தல்வேண்டும்
சிறியவராயிருந்தாலுஞ்சீராகவிருக்கவேண்டும்
ஒருவர்குறைகூறுதிருக்கவேண்டும்
ஊக்கமதுகைவிடாதிருக்கவேண்டும்
தக்கபுலவோர்களேபுகழுந்தண்கழனி
சூழ்பருளையுறைபவனைவாழ்த்தாய்நெஞ்சே
வித்தையுஞ்செல்வமும்விரும்பியேதேடவேண்டும்
கொலைகளவுகள்ளோடுடாதிருக்கவேண்டும்
வேண்டியகடனையேதீர்க்கவேண்டும்
வேசியர்களாசையைமறக்கவேண்டும்
மாற்றுனையுறவென்றெண்ணுதிருக்கவேண்டும்

மனுநீதிசாஸ்திரங்களோதவேண்டும்
பணந்தேடியனுபவித்துவாழவேண்டும்
பல்லுயிர்க்குற்றதுணையாகவேண்டும்
பத்தியாய்ச்சிவபூசைசெய்யவேண்டும்
இலைகனிபூவகைநிரம்பவேபுசிக்கவேண்டும்
ஆசிரியர்பணியதையன்புடனேபுரிதல்வேண்டும்
தக்கோர்க்கேநல்லுபகாரஞ்செய்யவேண்டும்
பொன்மதுரவாசகமேபேசவேண்டும்
உத்தியோகத்துடனேடுன்தொழில்பார்க்கவேண்டும்
நாவலர்களேத்திநின்பதமதுபணிந்திடப்
பருளையுறைபவனைவாழ்த்தாய்நெஞ்சே
ஊனமலேயுடம்பானதிருத்தல்வேண்டும்
உள்ளநோய்கள்பீடியாதிருக்கவேண்டும்
என்கொடியநோயறுததுமேதொலைத்திடத்
தண்கழனிசூழ்பருளைதனிலமர்முருகவேளைத்
தாழ்ந்துநின்றிறைஞ்சாய்நெஞ்சே

உலக நெறி

முற்றுப்பெற்றது.

வாழி

இந்தநற் பதிவாழி யிலங்கிடு பெரியோர்கள் வாழி
எங்கண் மாகுறைகள் தீரியல் ஜோர்ச்மன்னர் வாழி
இங்கினி தியற்றுநூலி னிலக்கணக் குறைதீர்த்தோர் வாழி
இங்கித மாகவேதா னிதையியம் பினேர்வாழி வாழி.

## கந்தரணி மாலை

முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் வரலாறும் நூற்சிறப்பும்

நீர் நில வளங்களும் நற்குடிச்சிறப்பும் சைவ ஆசாரங்களும் சைவத் தொண்டர்களும் சைவாசாரியர்களும் மலிந்து விளங்கிய சுழிபுரம். யாழ்ப்பாணத்து மேல் பற்று என்று முன்னோரால் புகழப் பெற்றது.

நாலாபக்கமும் வயல் நிறைந்த இச்சுழிபுரத்தின் வடபால் செந்நெல் வயல்களின் நடுவே மிகப் பழமையான சரித்திர புகழ்வாய்ந்த தாமரைத் தடாகத்தினருகே அமையப் பெற்றது இப் பருளை என்னும் திவ்வியதிருத்தலம்,

மகாகவி சின்னத்தம்பி புலவரவர்கள் போற்றிப் பாடிய பருளை வினயகர் கோயில் கொண்டிருப்பதும் இங்குதான். அதனருகே அமைந்த அழகிய கோவிலிலிருக்கும் அழகனே இந் நூலாசிரியர் போற்றிப்பாடிய கந்தவேள். இக்கோவிலில் மிகப், பழமை வாய்ந்த சிற்பச்சிறப்பமைந்த மூலஸ்தான சிலா விக்கிரகங்களும் பொன்னுலாய மிகப் பேரெழில் நிரம்பிய ஆறுமுகப் பெருமானின் விக்கிரகமும் இருக்கின்றன. யாழ்ப்பாணத்துக் கோவில்களில் முதன் முதலாக இத்தகைய திருவுருவம் இங்கேயே தோற்றுவிக்கப் பெற்றதெனலாம்.

இத்தகைய மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆசாரியர் வழிபாடாற்று முறை என்னும் ஐவகைச் சிறப்பும் நிறைந்த பருளை என்னும் திருத்தலத்தையுடைய சுழிபுரத்தில் சைவவேளாண்மரபில் பெரிய தனவந்தராகப் பெயர் பெற்றதாமர் என்றழைக்கப் பெற்று வந்த தாமோதரரின் பேரன் வயிரவநாதர் தாமோதரம்பிள்ளை அவரின் இல்லத்தரசி சோழகவம்சத்து வழிவந்த மனுநீதிவல்ல முதலியாரின் சந்ததியில் பிறந்தவரும் மாதகல் தில்லை உடையாரினது பேத்தியாருமான தங்கம் இவர்களது மூன்றுவது குமாரன் இம் மாலையைப் புனைந்த திருவயித்திலிங்கம். இவர் 1900ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் பிறந்தவர்.

இவர் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் திறமைபெற்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியரானுர் துடிதுடிப்பும் மன ஓர்மமும் கொண்ட இளைஞர் முற்போக்கானதும் தீர்க்க தரிசனமானதுமான பல கருத்துக்களைக் கொண்ட நல்ல பேச்சாளர் சட்டக்கல்லூரியிற் பயின்று நியாயதுரந்தரரானுர். குற்றஞ்சாட்டப்பட்டவர்களை நுட்பமான வாதத்திறமையால் [illegible]தாசக்

காப்பாற்றிவிடுவார் அதனால் புகழும் பொருளும் குவிந்தன. அதேவேளை சமூகத்துக்கே கேடுவிளைவிப்பவர்களை தந்திரமாக சிறைபுகவும் செய்து விடுவார்.

இவர்கள் பரம்பரையாகவே தெய்வபக்தியும் தெய்வத் தொண்டில் ஈடுபாடும் கொண்டவர்கள். பருளை முருகப்பெருமானின் ஆருந்திருவிழா பலவகைச் சிறப்புகளோடும் வருடந்தோறும் இவர்களால் நடாத்தப்பெறும். அந்தக் காலங்களில் சுவாமியினுடைய திருவுருவம் செயற்கையான கைகால்கள் சேர்க்கப்பெற்று திருவாபரணங்கள் மாலைகளால் அலங்கரிக்கப் பெற்று வீதியுலா வருவது வழக்கம். வைத்தியலிங்கம் அதிலும் ஓர் சீர்திருத்தத்தை விரும்பினார். செயற்கையான கைகால்களை நீக்கி சுவாமிபட்டினுலும் திருவாபரணங்களினுலும் சுகந்தமல்லிகை முல்லைமலர் மாலைகளாலும் அலங்கரிக்கப் பெற்று வீதியுலா வருமாறு விரும்பிச் செய்வித்தார். அடுத்தடுத்த ஆண்டுகளில் எல்லாத் திருவிழாக்களிலும் அவ்வாருன திருவலங்காரமே நிகழ்வதாயிற்று.

கிராம முன்னேற்றச் சங்கத்திலே சேர்ந்துழைத்து கமஅபிவிருத்தி வன்னிக் குடியேற்றம், திருடர் குடிகாரர் பயநீக்கம், கல்வி அபிவிருத்தி இவற்றுக்கான வழிவகைகளை வற்புறுத்துவார்.

அரசியல் சம்பந்தமான டொனமூர் திட்ட விஷயமாக லண்டன் சென்று, திரும்பிய தனிப்பெருந் தமிழ்த் தலைவரான சேர் பொன். இராமநாதன் அவர்களை மேளவாத்தியங்களோடு தண்டிகைமீது ஊர்வலமாக அழைத்து விக்ரோறியாக் கல்லூரியில் மகோன்னத வரவேற்பு உபசாரவிழா நடாத்திய ஓர் செயல்வீரர்.

1900-ம் ஆண்டு பிறந்து 1935-ம் ஆண்டில் மறைந்த சில ஆண்டு வாழ்வில் பல்லாண்டு வாழ்ந்த ஒருவர் போன்று பேச்சிலும், செயலிலும் பின்விளையக் கூடிய நலன்பல கண்ட சிந்தனைச் சிற்பியாகத் திகழ்ந்தார்.

இவரது இந்நூலிலுள்ள சிறப்புகள் வியப்புக்குரியன. இப்பாடல் திரு. தா. வயித்திலிங்கம் அவர்களால் தனது பிணியை யகற்றுவதற்காக இயற்றப்பட்டிருப்பினும், இதனுள் அடங்கிய கும்மி, அகவற்பா, ஆசிரியப்பா என்பனவும் எழுசீர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிநெடிலாசிரிய விருத்தங்களும், மிகவும் மெச்சத்தகுந்தவைகளாக அமைந்திருக்கின்றன. இலக்கியத்தை மனனம் பண்ணிய பின்னர் பாடும்போது மேலும் மேலுஞ் சுவை யூறிக்கொண்டிருக்கும்.

இந்நூலின்கண் இடம்பெற்ற பருளை ஸ்தலவரலாறும் ஆராய்ச்சியோ டமைந்திருக்கிறது. அருச்சுனன் தீர்த்தயாத்திரையில் இலங்கையும் இடம்பெற்றதை முக்கோணக் குன்று என்னுஞ் சொற்ருெடர் வரும் வில்லிபாரதத்துப் பாவினுல் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

உலக நெறியெனத் தரப்பட்டிருப்பவை இலங்கை தமிழ்ப் பேசும் மக்களுக்குத் தனியானவையாகக் கொள்ளின் அவை ஔஷதமான வாக்கு எனப் போற்றற் பாலன. தந்தைவேறு மகன் வேறு சாதியாகலாம் தொழில் மாறுவதைத் தடாதிருத்தல் வேண்டும். சாதியென்பது தொழில்பாகுபாடே என்ற கூற்றுக்களை ஐம்பது வருடங்களுக்கு முன்னரே நம் தமிழ் மக்கள் முன் வைத்தமை இந்நூலாசிரியன் எதிர்கால அறிவைச் சிறப்புப் படுத்துகின்றன.

உலக நெறியில் சிலமிகைப்படக் கூறப்பட்டிருப்பினும் அவற்றைக் கூறியது கூறும் குற்றமாகக் கொள்ளாது தெளிவுத் தேற்றத்துடன் வற்புறுத்திக் கூறுவதாகக் கொள்ளவும்.

இவரது நல்வாழ்வுக்கு ஒரேசான்று இலங்கையில் புகழ் பெற்ற கட்டிடக்கலைப் பொறியியல் நிபுணரும் குணசீலருமான திரு. தாமோதரலிங்கம் அவர்களாகும். அன்னுரின் வாழ்க்கைத் துணைவியார் வள்ளியம்மை அவர்கள் 19 வயது தொடக்கம் பதிவிரதங் கொண்டிருப்பதும் இன்னும்மோர் சிறப்பு.

பலஅரிய செய்திகளை அறியவைக்கும் இந்நூலை மறைந்துவிடாது முயன்று பாதுகாத்துதவிய இவரது சகோதரர் திரு. தா. சங்கரப்பிள்ளை அவர்களுக்கு மிக்க நன்றியுடையவர்களாயிருப்போம்.

பருளை
சுழிபுரம்
1980 வைகாசி 9

சு. ஷண்முகரத்னசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாசிரியர் :

திரு. தா. வயித்தியலிங்கம்

தோற்றம்: 1900 மறைவு: 1935

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுமுகப் பெருமான்
பருளை, சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org